**படல்கும்புற பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 07 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 15 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து படல்கும்புற பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 493,260,000 தொகையான காணி மற்றும் கட்டிடங்களின் உரித்து உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அளவீடு செய்வதற்கு தேவையான நிதி ஏற்பாடு காணப்படாமை மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட காணிகளின் அறிக்கை கிடைக்கப் பெறவில்லை என்பதை அறியத்தருகின்றோம். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| 139 ஆம் பிரிவு | ஆதனவரி அறவிடக்கூடிய எல்லையில் அமைந்துள்ள வரி அறவிடப்படாத சகல ஆதனங்களையும் இனங்கண்டு மதிப்பீடு செய்யும் பணிகளுக்காக தவணை அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யும் பணிகளுக்காக தவணை அறிக்கை பெறப்பட வேண்டும் | இதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்து எதிர்கால நடவடிக்கைகளுக்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஆளுனருக்கு அனுப்பப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி. 760 | 2015 அம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட 56 பொருள் விடயங்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புற்றாக்குறையான பொருட்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | 30 விடயங்கள் இதுவரையிலும் கண்டறியப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம் |
| (இ) 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | சபையினால் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்பட்ட 107 கட்டிட திட்டங்கள் பரீட்சிக்கப்பட்டு தரச்சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணங்களை பௌதீக ரீதியில் பரீட்சித்து வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் உறுதிப்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் தரச்சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு கட்டாயப்படுத்தப்படும் என்பதை அறியத்தருகின்றோம் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,046,273 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,741,559 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,021,000 | 1,021,000 | 975,156 | 45,844 | 790,000 | 948,957 | 846,484 | 102,473 |
| (ii) | வாடகை | 6,961,680 | 6,961,680 | 6,494,102 | 467,578 | 13,099,200 | 3,690,051 | 2,899,037 | 791,014 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 862,000 | 640,143 | 640,143 | - | 666,200 | 621,280 | 621,280 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 7,471,570 | 7,471,570 | 6,686,360 | 785,210 | 2,784,000 | 4,446,579 | 3,279,446 | 1,167,133 |
| | மொத்தம் | 16,316,250 | 16,094,393 | 14,795,761 | 1,298,632 | 17,339,400 | 9,706,867 | 7,646,247 | 2,060,620 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆதன வரி | | |
| (i) மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 395,262 தொகையான ஆதன வரி வருமானத்தில் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 99,233 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | ரூபா 66,740 தொகை இது வரையிலும் அறவிடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்த சிட்டையிடப்பட்ட பெறுமதியில் 25 சதவீதம் ஆகும். | | |
| (ii) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 281,030 தொகையான நிலுவை ஆதன வரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 200,442 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அது அறவிடப்படாத தொகை. ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை ஆதன வரித் தொகையில் 71 சதவீதம் ஆகும். | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | ரூபா 66,740 தொகை இது வரையிலும் அறவிடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | **வாடகை**<br>-------------<br>2011 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக சபைக்குரிய 13 ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதற்காக அறவிட வேண்டிய ரூபா 417,556 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டும். | பதிவேடுகள் பிழையாக பேணப்பட்டமையினால் பிழையான நிலுவை மீதியொன்று காணப்பட்ட போதிலும் அவற்றை எதிர்காலத்தில் சரி செய்வதற்கும் எஞ்சிய நிலுவைத் தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

**2.2.3 கடை வாடகை**

-------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| படக்கும்புர பிரதேச சபைக்குரிய போருந்து நிலைய இரண்டு மாடி சந்தைத் தொகுதியில் 13 கடைகளில் 10 கடைகளுக்கு மாதாந்த வாடகை அறவிடும் போது ஊவா மாகாண பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் 2016 மே முதல் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 479,600 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டு முதல் புதிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டமையினால் அந்த புதிய மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். |

### 2.2.4 ஏனைய வருமானம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய வீதி செப்பனிடுகை மற்றும் டிப்பர் வாகனம் என்பவற்றை வாடகைக்கு வழங்கியதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 231,240 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | ரூபா 156,720 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய தொகையும் அறவிடப்படுமென அறியத்தருகின்றோம். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் அறவிட வேண்டிய ரூபா 154,035 கூட்டுமொத்த நிலுவை நீர் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இது வரையிலும் ரூபா 39,670 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிட வேண்டிய நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,301,831 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 3,035,916 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | இது வரையிலும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 778,839 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,225,799 தொகையும் அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய தொகையும் அறவிடப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் உக்கும் கழிவுகளைப் பாவித்து சேதனப் பசளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேதனப் பசளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சேதனப் பசளை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | இது தொடர்பாக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய 03 வாகனங்கள் 2013 திசெம்பர் 03 ஆந் திகதி ஏலத்தில் விற்பனை செய்வதற்காக கஹகொல்ல மாகாண இயந்திர அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் | எஞ்சிய நடவடிக்கை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கெப் வண்டியின் உரித்தை கையேற்பதற்கும் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ள கை உழவு இயந்திரத்திற்குரிய பணத்தை பெற்றுக் கொள்வதற்கும் கோரப்பட்டிருந்ததுடன் தண்ணீர் பௌசரையும் |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | ஏலத்தில் விற்பதற்கு கேள்வி கோரப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்குதல்<br>------------------------------------<br>சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய 73 செயற்பாடுகளுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கப்படாமையினால் ஒரு அனுமதிப் பத்திரத்திற்கு ரூபா 4,000 வீதம் ரூபா 292,000 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இந்த வியாபாரங்களை பரீட்சித்து உரிய கட்டணத்தை அறவிட்டு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். | உரிய தொழில்களின் உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (இ) | சபை பயன்படுத்துகின்ற 04 வாகனங்களின் சட்ட ரீதியான உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியான உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான ஆவணங்களை தயாரித்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

---------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதவியணியினர் வெற்றிடம்<br>------------------------------------------<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5 பதவிகளுக்குரிய ஊழியர்களில் 8 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி திணைக்களத்திற்கு தகவல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய 79 ஏக்கர் அளவான 98 காணி கூறுகளின் சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 89 காணிக் கூறுகளின் அளவிடை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | சபைக்குரிய காணிகளின் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு சட்ட ரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். | இதற்காக தேவையான ஆவணங்கள் பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். |
| (ஆ) | ரூபா 1,617,483 தொகையான செலவில் போகஹபெலெஸ்ஸ சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட போகஹபெலெஸ்ஸ 2 கடைகள் வீதி ஒதுக்கப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டமையினால் அந்த காணியை கையேற்பதற்கு முடியாதிருந்தது. | உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (இ) | புஸ்ஸல்லேவ கிராம உத்தியோகத்திரிடமிருந்து வைக்குர்புறுவத்த காணியில் 15 ஏக்கர் அளவில் கழிவுப் பொருள் மீள் சுழற்சி திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு 2009 யூன் 12 ஆம் திகதி விஷேட பொது கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டு 2010 திசெம்பர் 14 ஆம் திகதி சபையின் உரித்துக்கு கையேற்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த காணியின் அளவிடை நடவடிக்கைகளுக்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 120,000 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. 9 வருட அளவிலான நீண்ட காலம் கடந்திருந்த போதிலும் உரிய | கழிவுப் பொருள் மீள்சுழற்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் அனுமதியற்ற குடும்பங்களை அகற்றி காணியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணியை விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்துவதற்கு தவறியிருந்ததுடன் இந்த காணியில் அனுமதியற்ற 11 குடும்பங்கள் குடியிருந்து வருகின்றன. | | |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான 4 நூலகங்களில் இருந்து 2007 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வாசகர்களுக்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 64,833 கிரயமான நூலக புத்தகங்களில் 541 ஐ மீளப்பெறுவதற்கு அல்லது அதற்கான பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நூலக புத்தகங்களை மீளபெற்றுக் கொள்வதற்கு அல்லது பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணிசமான புத்தகங்களின் அளவொன்று மீள கிடைத்திருந்ததுடன் எஞ்சிய புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (உ) | இறுதியாக 2014 ஆம் ஆண்டின் போது நாளது வரையாக்கப்பட்டிருந்த வீதி பதிவேட்டின் பிரகாரம் 102 வீதிகள் காணப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் பிரகாரம் அந்த வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வீதிப் பதிவேட்டை நாளது வரையாக்கி வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீதி பதிவேடு நாளது வரையாக்கப்பட்டதன் பின்னர் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஊ) | வாகனப் பயன்பாடு<br>----------------------------------<br>சபைக்குரிய டிப்பர் வாகனம் கிலோ மீட்டர் ஒன்றுக்கு ரூபா 109 தொகையான வாடகையை அறவிடும் அடிப்படையில் தனியார் நிறுவனம் ஒன்றிக்கு வழங்குவதற்கு 2018 நவம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டு, 2018 திசெம்பர் 05 ஆம் திகதி முதல் 2019 யூன் 03 ஆம் | | |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரை வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டு ரூபா 219,240 வாடகை வருமானம் ஒன்று சேகரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கீழே காண்பிக்கப்படுகின்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | டிப்பர் வாகனம் வாடகை அடிப்படையில் வழங்கும் போது உரிய தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. | சபைக்குரிய வாகனத்தை வாடகை அடிப்படையில் வழங்கும் போது உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும். | வாய்மொழி மூல உடன்பாட்டின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம். |
| (ii) | வாடகை அடிப்படையில் பெறப்பட்ட மேற்கூறப்பட்ட காலப் பகுதிக்குரிய 2018 திசெம்பர் 05 முதல் 2019 பெப்ரவரி 24 வரையான காலத்தில் டிப்பர் வாகனம் 6654 கிலோ மீட்டர் ஓடியிருந்த போதிலும் அந்த ஓட்டத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நாளாந்த ஓட்ட அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நாளாந்த ஓட்ட அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும். | சாரதியினால் ஓட்ட அட்டவணை காணாமல் போயிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் எரிபொருள் பயன்படுத்தும் பதிவோடு ஒன்று பேணப்பட்டு செல்லப்படுகின்றது என்பதை அறியத் தருகின்றோம். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பேரிதயளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்துடன் எதிர்காலத்தில் உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |